**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXV ,BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.545/2025 |
| Deposition of witness for Prosecution | : | PW-1 |
| Name | : | சரவணதேவி, வயது 34 |
| Father Name/Husband Name | : | காசிராஜன் |
| Village | : | விருதுநகர் |
| Taluk | : | விருதுநகர் |
| Calling | : | அழகு நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of February 2026.

**(A1, A2 absent. u/s 355 BNSS Petiton filed and allowed).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது விருதுநகர் வசித்து அழகு நிலையம் வைத்துள்ளேன். ஆஜர் இல்லாத எதிரிகளை எனக்குத் தெரியும். கடந்த 13.07.2025 அன்று மதியம் 01.00 மணியளவில் பழனியாண்டவர் கோவில் தெரு வேன் ஸ்டாண்ட் அருகே வைத்து 1வது எதிரி ஏன்டி தேவிடியா என்று அசிங்கமாகத் திட்டி, எனது முதுகில் குத்தியும், 2வது எதிரி எனது வலது கையை முறுக்கினார். உடனே அருகில் உள்ளவர்கள் வந்து எதிரிகளை பிடித்துக் கொண்டார்கள். நான் நடந்து காவல் நிலையத்திற்குள் சென்று புகார் கொடுத்தேன்.

2 எனது அக்கா பசங்கள் லவ் காரணமாக நான் சமாதானம் பேசியதால் எதிரிகள் என்னை அடித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3 என்னுடன் உடன் பிறந்தவர்கள் எதிரிகளுடைய தாயார் மற்றும் 2 அண்ணன், ஒரு தங்கை ஆகும். என் உடன்பிறந்த தங்கை இறந்து விட்டார். எனது தங்கையின் ஒரு மகளை எதிரிகளுடைய தாயார் வளர்க்கிறார். மற்றொரு தங்கையின் மகளை ஒரு அண்ணன்

வளர்க்கிறார். எதிரிகள் கோவில்பட்டி ராஜீவ் நகரில் குடியிருக்கிறார்கள். நான் விருதுநகரில் குடியிருக்கிறேன். நானும் எனது கணவரும் கருத்து வேறுபாடால் பிரிந்து இருக்கிறோம் என்றால் சரிதான். கோவில்பட்டி பழனியாண்டவர் தெரு என்பது தென்வடல் தெரு, அந்த தெருவிற்கு கிழக்கே தான் பழனியாண்டவர் கோவில் தெரு உள்ளது என்றால் சரிதான்.

4 அந்த தெருவிற்கு மேற்கே தான் வேன் ஸ்டாண்ட் கிழக்கு காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை அருகில் இருந்தவர்கள் பார்த்தார்கள். நான் எதிரிகளின் தாயாரை அசிங்கமாகத் திட்டியது சம்பந்தமாக எதிரிகளின் தந்தை என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், அதில் 13.07.2025 அன்று சமரசம் பேசி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் முடிக்கப்பட்டது. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அசிங்கமாகத் திட்டி, கையால் தாக்கி, பொது இடத்தில் வைத்து பெண் என்றும் பாராமல் கொடுமை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிகளின் தாயாருக்கும் இடையே உள்ள பிரச்சனையை மனதில் வைத்து பொய் புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.